


ஆலந்தூரில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு. கழக அவசர செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா. மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்டக் கழக நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விசுவநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று (03.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 8 புதிய மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்து, ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 2 புதிய மருத்துவ கட்டிட கட்டுமான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

### 4 ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 1945.15 கோடி சிறப்பு ஊக்கத் தொகை வழங்கல்!

# மோகனூர் சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

நாமக்கல் செப். 4 -

நாமக்கல் மாவட்டம், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி துவக்க விழா நடைபெற்றது.

விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமை தாங்கினார் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி, சர்க்கரைத் துறை இயக்குநர், த.அன்பழகன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணியை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

விழாவில் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்ததாவது, நாமக்கல் மாவட்டத்தில் கீமூர், மேலூர், கெடமலையை இணைக்கும் வகையில், போதமலையில் சாலைகள், இராசிபுரம் தொகுதியில் புதிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள் அந்த வகையில், விசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான மோகனூர் சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்தியை அதிகரிப்பது நமது தலையாய கடமையாகும். கூட்டுறவுத்துறையின் உண்மையான உழைப்பாளர்கள் என்றால், இங்கு பணியாற்றும் பணியாளர்கள் தான். உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்காக நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும். எனவே இத்திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்ததாவது, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறையில் இயங்ககூடிய முதல் எத்தனால் ஆலை என்ற பெருமையை பெற்று இந்த எத்தனால் ஆலை ரூ.1400 இலட்சத்தில் வடிவமைக்கப்பட்டு 1993-ல் உற்பத்தியைத் துவங்கியது. இந்த எத்தனால் ஆலை நாளொன்றுக்கு 30,000 லிட்டர் எத்தனாலும், 10,000 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட எத்தனாலும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இந்த எத்தனால் சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் அடிப்படை தேவையான கரும்பஞ்சாறு கசண்டு மூலம் எத்தனால் தயாரிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 70,000 டன்கள் கரும்பஞ்சாறு கசண்டு தேவைப்படுகிறது. இந்த ஆலையில் கிடைக்கும் கரும்பஞ்சாறு கசண்டு பயன்பாடு போக, தேவைப்படும் கரும்பஞ்சாறு கசண்டு இதர கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலையிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் 22.10.2024 அன்று நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது எத்தனால் ஆலையின் உற்பத்தி திறனை மேம்படுத்தும் பொருட்டு ரூ.6.67 கோடி செலவில் ஆலை மேம்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆலையின் உற்பத்தி திறன் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக அதிகரிக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கரும்பு விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று டன் ஒன்றுக்கு ரூ.750/- உயர்த்தி வழங்கியுள்ளார்கள். மேலும் அரசின் கரும்பு உற்பத்திக்கான சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/- வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2024-2025-ம் ஆண்டு 74,270 டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டு சுமார் 1004 விவசாயிகளுக்கு ரூ.23.47 கோடி ரூபாய் கரும்பு கிரயத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசின் கரும்பு உற்பத்திக்கான சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/- வீதம் ரூ.2.58 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆலையின் மூலம் கரும்பு பயிரிடும் விவசாய அங்கத்தினர்களுக்கு 2025-2026-ல் புதிய ரக கரும்பு நடவிற்காக மத்திய மற்றும் மாநில அரசு மூலம் மானியத் தொகை வழங்கப்பட்டு அக்டோபர் 2025 முதல் புதிய கரும்பு ரகங்கள் நடவு செய்யப்பட உள்ளது. மாநிலம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.1145.12 கோடி, வழிவகை கடன் ரூ.800.03 கோடி என ரூ.1945.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் இவ்வளவு தொகை வழங்கிய பெருமை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சேரும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் 5 அங்கத்தினருக்கு ரூ.1,75,000/- மதிப்பீட்டில் மாதிரி வயல் மானியத் தொகை மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மானியத் தொகையினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் / செயலாட்சியர் இரா.குப்புசாமி, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் பெ.நவலடி, அட்மா இயக்குநர் ஏ.பி.ஆர்.சண்முகம், கரும்பு பெருக்க அலுவலர் அ.சுப்புராஜ் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் சட்டமன்றத் தொகுதி,

# 77 -வது வார்டில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## இ.பரந்தாமன் எ.எல்.ஏ., மனுக்களை அளித்தவர்களுடன் கலந்துரையாடல்!

சென்னை, செப். 4 -

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, தட்டான்குளம், பழைய ஆட்டுத் தொட்டி தெருவிலுள்ள மாநாகராட்சி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (02.09.2025) நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமைத் தொடங்கி வைத்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, பொதுமக்களின் குறைகளை அவர்களின் வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் ஜூலை 15, 2025 முதல் நவம்பர் 2025 வரையிலும் அனைத்து மாவட்டங்களிலும் 10,000 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் குறித்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்கிட மருத்துவ முகாமும் நடத்தப்படுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.77க்குட்பட்ட பொதுமக்களுக்கான “உங்களுடன் ஸ்டாலின்” முகாம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில், 02.09.2025 அன்று தட்டான்குளம், பழைய ஆட்டுத்தொட்டித் தெருவிலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, காவல்துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து 1,710 விண்ணப்ப மனுக்கள் பெறப்பட்டு, உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்கான ஒப்பமும் வழங்கப்பட்டது.

இம்மனுக்களுள் நகராட்சி நிர்வாகத்துறையைச் சேர்ந்த 6 மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டன. மேலும், பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் இம்முகாமைத் தொடங்கி வைத்ததோடு, முகாமில் இடம் பெற்ற ஒவ்வொரு அரசுத் துறை பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டு, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தெரிவித்தார். மேலும், இம்முகாமையொட்டி நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு, மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இம்முகாமில் அதிகாரிகள் சரவணன், ஹரிபாபு, சக்திவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

மேலும், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மு.கமலக் கண்ணன், மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், பாக முகவர் கவிதா, கோமகன், முத்து, கார்த்திகேயன், கே.பி.பார்க் சதீஷ், ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன்-இ. கருணாநிதி-எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு !

# பம்மல் தெற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் !

## பகுதிக் கழகச் செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கை!

சென்னை செப்:4

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில்,6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையில் பகுதி கழக பொருளாளர் ஆர். உமாசங்கர்,பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,பா. கவிதா,துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா. டில்லி,மாநகர பிரதிநிதிகள் பி.ஜே. வேந்தன்,என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு,ரா.கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பம்மல் எஸ்.எஸ். மஹால் திருமண மண்டபத்தில் நாளை 5.9.2025 மாலை 5.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா. மோ.அன்பரசன்,பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ. கருணாநிதி,தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

மாநகராட்சி மேயர்தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர்தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ்,பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது ,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல். பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி. ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பி.எஸ். ரவி, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், மு.இன்பசேகர் எம்.சி., என். காந்தி, முகமது அப்பாஸ், எம். சுகுமாரன், பி. ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் ஏ. மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன்,

ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட,மாநகர,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள் (BLA2), கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்:

1. வருகிற 08.09.2025 அன்று காலை சென்னை திரும்பும் முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதை
2. வருகிற 10.09.2025 அன்று செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு
3. குன்றத்தூரில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு
4. பூத் வாரியாக பூத் கமிட்டி கூட்டம் நடத்துவது
5. ஒரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவங்கள் சமர்ப்பித்தல்
6. முப்பெரும் விழா
7. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கலவை பேரூர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



செய்யாறு மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



தூரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



முதுகுளத்தூர் மத்திய ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சூலூர் வடக்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.